மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) பதின்மூன்று வழித் தடங்கள் புதிதாக துவக்கப் பட்டுள்ளன.

Damages caused to State Transport buses.

*624 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether a number of State Transport buses were damaged by crowds in Madras around 20th July 1973; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) 19—7—1973 ஆம் நாளன்று சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில் ஊர்வலமாகச் சென்ற பல்வேறு தொழிற் சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்களால் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த 59 பேருந்துகள் சேதப்படுத்தப்பட்டன.

திரு. ரா. ரா. முனுசாமி: தமிழகத்தில் இப்படி அடிக்கடி போராட்டங்கள், தொழிலாளர் ஊர்வலங்கள், மாணவர்கள் ஊர்வலங்கள், இவை ஏற்படுகிறபோது பொதுச்சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கிறார்கள். அப்படி விளைவிக்கக்கூடியவர்கள் யாரால் தூண்டிவிடப்பட்டு வளர்க்கப்படுகிறார்கள் என்பதை அரசு ஆராய்ந்து அவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்ற கருத்தினைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பஸ்களைப் பொறுத்த வரையில் அது பொதுமக்கள் வரிப் பணத்திலிருந்து நடைபெறுகிற பொதுச் சொத்தாகும் என்கிற உணர்வு பொது வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும் அல்லது பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருக்கிறவர்களானாலும், அவர்களுக்கு அந்த உணர்வு வருமானால் இப்பிரச்னைகள் தீரலாம்.

திரு. கே. கந்தசாமி : பொதுவில் வந்த ஆடு புழுத்துச் சாகும் என்று கிராமங்களில் ஒரு பழமொழி உண்டு. இன்று பொது மக்களின் வரிப்பணத்தால் இயங்குகிற பொதுச் சொத்துக்களுக்கு

1973 டிசம்பர் 4]

ஆபத்து அல்லது சேதம் விளைவிக்கும் சமுதாய விரோதிகளின்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஒத்தாசை செய்ய பொது மக்கள் இல்லாவிட்டாலும் பொதுமக்களின் அரசாக இருக்கிற நம் அரசு கடுமையான நடவடிக்கைகளை இனிமேலாவது எடுக்க முன்வருமா ?

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பழமொழி என்னவோ எனக்குத் தெரியாது. இன்றைக்குப் பொது சொத்துக்களைச் சேதப்படுத்துவது புது மொழியாகிவிட்டது.

திரு. எம். ஏ. லத்திப் : இவ்வாறு பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்தும்பொழுது மக்களுடைய வரிப்பணம் தான் அதிலே நஷ்டமாகிறது. எங்கே பொதுச்சொத்துக்கள் குறிப்பிட்ட இடங்களில் நஷ்டப்படுத்தப்படுகின்றனவோ அந்த இடங்களைக் குறிப்பிட்டு, அந்த இடங்களில் ப்யூனிடிவ் டாக்ஸ் போடுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய யோசனை எதுவுமில்லை.

திருச்செந்தூரில் பெண்கள் கல்லூரி

***625 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்செந்தூரிலுள்ள அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து அங்கு பெண்களுக்கென தனியே ஒரு கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

கங்கைகொண்ட சோழபுரம் கோயில் திருப்பணி

***626 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கங்கைகொண்ட சோழபுரம் கோயிலைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம். உள்ளது.